**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 176/2019**

2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.06.2025 | தகப்பனார் பெயர்: | ராஜா |
| பெயர்: | பரமசிவம்<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | பெருந்தோட்டம் | சமயம்: | |
| தொழில்: | தனியார் கம்பெணி | வயது : | 39/2025 |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :17.06.2025</u>

1. நான் வசிப்பது பெருந்தோட்டம் கிராமம். சொத்து இருப்பது கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட திருமைலாடி கிராமம். திருமைலாடி கிராமம் சீர்காழி டவுனில் இருந்து வடக்கில் சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். பெருந்தோட்டம் கிராமம் என்பது சீர்காழியில் இருந்து தென் கிழக்கில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து நரங்சிகராவ் என்பவர் பெயரில் இருந்ததற்கான ஆவணம் ஏதேனும் இந்த வழக்கில்நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அவர்கள் வாரிசுகள் பெயரில் உள்ள ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நரங்சிகராவ் எந்த தேதியில் இறந்தார் என்பதை நான் வழக்குரையிலோ அல்லது நிரூபன வாக்குமூலத்திலோயோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நரங்சிங்கராவ் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள கிரய பத்திரம் வா.சா.ஆ.1 –ல் வாரிசு சான்று இணைக்கப்பட்டுள்ளது என்றும், அதில் 8 நபர்கள் வாரிசுகளாக

குறிப்பிடப்பட்டுள்ளார்கள் என்றாலும் சரிதான். வாரிசு சான்றிதழில் உள்ள காவேரி, மோகன் ஆகிய இரு நபர்களும் வா.சா.ஆ.1–ல் கையெழுத்து செய்யவில்லை என்றால் காவேரியின் வாரிசுகள் கையெழுத்து செய்துள்ளனர். மோகன் திருமணம் ஆவதற்கு முன்பே இறந்துவிட்டார். மோகன் என்பவர் திருமணம் செய்யாமல் இறந்துவிட்டார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் திருமணம் ஆகிதான் இறந்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை நான் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் என்ன முறையில் நான் அனுபவித்து வருகிறேன் என்கிற விபரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால்
இல்லை.

3. தாவா சொத்தில் உள்ளபடியே நான் அனுபவத்தில் இருந்திருந்தால் அதில் என்ன சாகுபடி செய்துள்ளேன் என்று கூறியிருப்பேன் என்றாலும், நான் அனுபவத்தில் இல்லாததால்தான் அவ்வாறு கூறவில்லை என்றாலும் சரியல்ல. இடைக்கால உறுத்துக்கட்டளை மனு எனக்கு ஆதரவாக உத்தரவு ஆகிவிட்டபடியால் அதை பொறுத்து இந்த வழக்கை தீர்மாணிக்க முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்கள் எனது பெயருடன் கூடிய கூட்டு பட்டா என்பதற்கான ஆவணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் எனது செல்வாக்கை பயன்படுத்தி பெறப்பட்டது என்றாலும் அதனால்து செல்லாது என்றாலும் சரியல்ல. மே்றபடிய ஆவணத்தில் பரமசிவம் சாகுபடி செய்ததாக இல்லை, கங்காபாய் சாகுபடி செய்துள்ளாதாக இருக்கிறது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.6 ஆவணம் என்பது வழக்கு தாக்கல் செய்த பிறகு சுமார் 6 வருடங்கள் கழித்து பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் 2021–லும் மற்றும் வா.சா.ஆ.8 ஆவணம் 2024–ம் வருடத்திலும் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமான கிஸ்தி ரசீதில் பரமசிவம் மற்றும் இரண்டு நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு

தாக்கல்செய்யத காலத்தில் வழக்கு சொத்து என்னிடம் அனுபவத்தில் இருந்துது என்பதற்கான ஆவணம்ஏதேனும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதனால் நான் கேட்டுள்ள தாவா பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றாலும் சரியல்ல. நான் வாங்கிய கிரய ஆவணம் சட்ட ரதீயாக செல்ல தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**